சுருக்கம்

வேளாண்மை - உழவர் நலன் – 2023–2024 – ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் - "தகவல் பரிமாற்றக்குழு உருவாக்கி செயல்படுத்திட வட்டார அளவில் விவசாயிகளைக் கொண்டு "வாட்ஸ் ஆப்" குழு உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.2) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது, சித்திரை மாதம் 26-ம் நாள்

அரசாணை (டி) எண்.112

நாள்.09.05.2023

படிக்கப்பட்டது:

வேளாண்மை இயக்குநரின் கடித எண். வேதபி 3 /தகவல்/ 26532 / 2023, நாள் 12.04.2023.

---

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கடந்த 21.03.2023 அன்று தாக்கல் செய்த 2023-2024-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் "தகவல் பரிமாற்றக்குழு உருவாக்கி, செயல்படுத்திட வட்டார அளவில் விவசாயிகளைக் கொண்டு "வாட்ஸ் ஆப்" குழு உருவாக்குதல்" குறித்து பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

" விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்பங்கள், சந்தை நிலவரம், வானிலை முன்னறிவிப்புகள், மானியங்கள், பூச்சி - நோய் தாக்குதல் போன்ற தகவல்களை உடனுக்குடன் கொண்டு செல்வதற்கு ஏதுவாக, வட்டார அளவில் விவசாயிகளை கொண்டு "வாட்ஸ் ஆப்" குழு உருவாக்கப்படும். இக்குழுவில் அனைத்து குக்கிராமங்களிலிருந்தும், விவசாயிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவார்கள். இதன் ஒருங்கிணைப்பாளராக வட்டார வேளாண்மை உதவி

(த.பி.பா)

இயக்குநரும் தோட்டக்கலை உதவி இயக்குநரும் செயல்படுவார்கள்".

வட்டார குழுக்களை ஒருங்கிணைத்து மாவட்ட அளவிலும் குழுக்கள் உருவாக்கப்படும். துறையின் மாநில அளவில் செயலாற்றும் விளம்பரப்பிரிவு மாவட்டத்திற்குரிய தகவல்களை குறுஞ்செய்தி (SMS), குரல் வழிச் செய்தி (Voice Message), குரல் வழி அறிவிப்பு (Voice Blasting), மின்னணு விளம்பரம் (Digital Advertisement) வாயிலாக மாவட்டக் குழுவிற்கு அனுப்பி வைக்கும். இத்தகவல்கள் உடனடியாக வட்டார அளவில் உள்ள விவசாயிகள் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அவர்கள் தங்களது குக்கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்குத் தகவல்களைத் தெரிவிப்பார்கள்".

2. மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 2023-2024-ஆம் ஆண்டின் இவ்வறிவிப்பினை செயல்படுத்துதல் தொடர்பாக, வேளாண்மை இயக்குநர், பார்வையில் படிக்கப்பட்ட தனது 12.04.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் கருத்துருவினை அனுப்பியுள்ளார்:-

<u>திட்டத்தின் குறிக்கோள்:</u>

கணினிமயமான நவீன காலத்தில் செய்திகள் மற்றும் தகவல்களை மக்களிடையே உடனுக்குடன் கொண்டு சேர்ப்பதில் சமூக ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இந்நிலையில், தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் வேளாண்மை சார்ந்த அனைத்து தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களை வேளாண் பெருமக்களிடையே கொண்டு சேர்ப்பது அவசியமாகிறது.

வேளாண்மை தொடர்பான அனைத்து தகவல்களையும் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு கொண்டு சேர்ப்பதற்காக, விவசாயிகளைக் கொண்டு "வாட்ஸ் ஆப்" குழு உருவாக்கப்பட உள்ளது. இக்குழு, விவசாயிகளுக்கு தேவையான தகவல்களை சரியான நேரத்தில் வழங்குவதன் மூலம் வேளாண் உற்பத்தியை அதிகரித்து அதை நிலைப்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். விவசாயிகள் தங்களுக்கு தேவையான தொழில்நுட்பம், சந்தை நிலவரம், வானிலை முன்னறிவிப்புகள், மானியத்திட்டங்கள், பூச்சி - நோய் மேலாண்மை போன்ற தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள இக்குழு உதவி புரிந்திடும்.

திட்டத்தின் செயல்முறை:

i. குழு உருவாக்கம்:

தகவல் பரிமாற்றக் குழு சென்னையை தவிர அனைத்து மாவட்டங்களிலும் உருவாக்கப்படும். இக்குழுவில் இடம் பெறும் விவசாயிகள் தங்கள் கைபேசியில் "வாட்ஸ் ஆப்" செயலியை கொண்டிருத்தல் வேண்டும். வட்டார அளவிலான குழுவில் இடம் பெறும் விவசாயிகள் அவ்வட்டாரத்திலுள்ள வருவாய் கிராமங்களை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். ஒரு "வாட்ஸ் ஆப்" குழுவில் அதிகபட்சமாக 1,024 உறுப்பினர்கள் இடம்பெறலாம். எனவே, வட்டாரத்திலுள்ள அனைத்து குக்கிராமங்களிலிருந்தும் விவசாயிகள் உறுப்பினர்களாக இருந்திட வேண்டும். வட்டார வேளாண்மை உதவி இயக்குநரும், தோட்டக்கலை உதவி இயக்குநரும் இக்குழுவிற்கு ஒருங்கிணைப்பாளர்களாக இருப்பார்கள். வேளாண்மை – உழவர் நலத் துறையைச் சார்ந்த பிற சகோதரத் துறைகளில் உள்ள வட்டார அளவிலான அலுவலர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

ii. மாநில அளவிலான விளம்பரக் குழுவானது, (Publicity and Promotion Cell) மாவட்ட அலுவலர்களை கொண்டு மாநில அளவிலான "வாட்ஸ் ஆப்" குழுவினை உருவாக்கிடும்.

iii. மாவட்ட அளவிலான விளம்பர குழுவானது, வட்டார குழுக்களில் உள்ள அலுவலர்களைக் கொண்டு மாவட்ட அளவிலான "வாட்ஸ் ஆப்" குழு உருவாக்கப்படும். மாவட்ட அளவில் வேளாண்மை இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவார். இவருக்கு வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) குழுவின் அன்றாட பணிகளுக்கு உதவி புரிந்திடுவார்.

தகவல் பரிமாற்றத்தின் செயல்முறை:

அ) புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் செயல்படும் மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம், (STAMIN) மூலம் வாரத்திற்கு குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு வேளாண் தக்வல்களை குறுஞ்செய்தி (SMS), குரல்வழிச்செய்தி (Voice Message), குரல்வழி அறிவிப்பு (Voice Blasting), மின்னணு விளம்பரம் (Digital Advertisement) வாயிலாக மாநில அளவில் செயலாற்றும் துறையின் விளம்பரப் பிரிவு மாவட்டக் குழுவிற்கு அனுப்பி வைக்கும்.

ஆ) பின்னர், இத்தகவல்கள் வட்டார வாரியாக, அந்தந்த வட்டார அளவில் உள்ள விவசாயிகள் குழுவிற்கு மாவட்டக் குழுவிலிருந்து தகவல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இ) மாவட்ட அளவில் செயலாற்றும் துறையின் விளம்பரப் பிரிவின் மூலம் அந்த மாவட்டத்திற்கு ஏற்றவாறு குறைந்தபட்சம் வாரத்திற்கு நான்கு வேளாண் தகவல்கள் வட்டார விவசாயிகள் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும்.

ஈ) வட்டாரக் குழுவில் தகவல்களைப் பெற்ற விவசாயிகள், தங்களது குக்கிராமத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தகவல்களைப் பகிர வேண்டும். இதன் மூலம், வேளாண்மை - உழவர் நலத்துறை சார்ந்த அனைத்து விதமான தகவல்களையும் "வாட்ஸ் ஆப்" குழு மூலம் உடனுக்குடன் தெரிந்துகொண்டு விவசாயிகள் பயன் பெறுவர்.

<u>தகவல் பரிமாற்றச் செயல்முறை கண்காணிப்பு</u>

அ) மாநில, மாவட்ட அளவில் செயலாற்றும் துறையின் விளம்பரப் பிரிவின் மூலம் தெரிவிக்கப்படும் வேளாண் தகவல்கள் வட்டார அளவில் விவசாயிகளை கொண்டு உருவாக்கப்படும் தகவல் பரிமாற்றக் குழுவில் பகிரப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, TNAGRISNET வலைதளத்தில் உள்ள Agri Reporting System (ARS) module – இல் பிரத்தேயமாக மென்பொருள் உருவாக்கப்படும்.

ஆ) மாநில அளவிலான விளம்பரப் பிரிவு, புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் செயல்படும் மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம், (STAMIN) மூலம் தயார் செய்யப்பட்ட வேளாண் தகவல்களை குறுஞ்செய்தி (SMS), குரல்வழிச் செய்தி (Voice Message), குரல்வழி அறிவிப்பு (Voice Blasting), மின்னணு விளம்பரம் (Digital Advertisment) போன்றவைகள், மாவட்ட அளவிலான தகவல் பரிமாற்ற குழுவில் பதிவேற்றம் செய்த விவரம் புகைப்படத்துடன் (Screenshot) தேதி வாரியாக பயனர் குறியீட்டினைக் (id) கொண்டு, Agri Reporting System (ARS) module – இல் பதிவு செய்யப்படும்.

இ) மாவட்ட அளவில் செயலாற்றும் துறையின் விளம்பரப் பிரிவானது மாநில அளவிலிருந்து பெறப்படும் வேளாண் தகவல்களையும் அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்றவாறு அப்பிரிவின் மூலம் தயார் செய்யப்படும் வேளாண் தகவல்களையும் குறுஞ்செய்தி (SMS), குரல்வழிச் செய்தி (Voice message), குரல்வழி அறிவிப்பு (Voice Blasting), மின்னணு விளம்பரம் (Digital Advertisment) ஆக வடிவமைத்து, வட்டார அளவில் உள்ள தகவல் பரிமாற்றக் குழுவில் பதிவேற்றம் செய்த விவரம் புகைப்படத்துடன் (Screen shot) தேதி வாரியாக மாவட்ட பயனர் ID-யை கொண்டு, Agri Reporting System (ARS) module -இல் பதிவு செய்யப்படும்.

ஈ) விவசாயிகளைக் கொண்டு உருவாக்கப்படும் வட்டார தகவல் பரிமாற்ற குழுவில் பதிவிடப்படும் வேளாண் தகவல்களை Agri Reporting System (ARS) module – இல் பதிவேற்றம் செய்வதால், வேளாண்மைத் துறையின் மூலம் வழங்கப்படும் தகவல்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு பகிரப்படுகிறதா என உறுதி செய்திட முடியும். மேலும், குறிப்பிட்ட வட்டார தகவல் பரிமாற்றக் குழுவில் வேளாண் தகவல்கள் பகிரப்படுவதில்லை என்ற அறிக்கையையும் பதிவிறக்கம் செய்ய முடியும்.

உ) மாநில அளவில், தகவல்கள் விவசாயிகளை சென்றடைவதைக் கண்காணிக்கும் விதத்திலும் அவ்வப்போது விவசாயிகளின் கருத்துக்களை பெறுவதற்கும், விவசாயிகளை உடனுக்குடன் தேவையின் அடிப்படையில் தொடர்பு கொண்டு இப்பணி கண்காணிக்கப்படும்.

3. எனவே, 2023-2024 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிவிப்பின்படி மாவட்டத்திற்குரிய தகவல்களை குறுஞ்செய்தி (SMS), குரல் வழிச் செய்தி (Voice Message), குரல் வழி அறிவிப்பு (Voice Blasting), மின்னணு விளம்பரம் (Digital Advertisement) வாயிலாக மாநில அளவிலான விளம்பரப் பிரிவினால் மாவட்டக் குழுவிற்கு அனுப்பி, பின்னர், இத்தகவல்கள் வட்டார வாரியான விவசாயிகள் குழுவிற்கு மாவட்டக் குழுவிலிருந்து தகவல்களை அனுப்பி வைக்கவும், இக்குழுக்களின் செயல்பாடுகள் அனைத்தையும் மாநில அளவில் கண்காணிக்கலாம் எனவும், இதன்மூலம், வட்டாரக் குழுவில் உள்ள விவசாயிகளுக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றதும், தங்களது

குக்கிராமத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தகவல்களை வழங்க ஏதுவாகும். இதன் காரணத்தினால், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்ந்த அனைத்து தகவல்களையும் "வாட்ஸ் ஆப்" குழு மூலம் உடனுக்குடன் தெரிந்துகொண்டு விவசாயிகள் பயன்பெறுவர் என வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். இத்தகவல் பரிமாற்றக் குழுவினை 2023-2024 ஆம் நிதியாண்டில் உருவாக்கலாம் எனவும் வேளாண் விரிவாக்கப் பணியினை செயல்படுத்திட நிதி ஆதாரம் தேவையில்லை எனவும் குறிப்பிட்டு, உரிய ஆணை வழங்க வேளாண்மை இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2023-2024 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு "தகவல் பரிமாற்றக்குழு உருவாக்கி, செயல்படுத்திட வட்டார அளவில் விவசாயிகளைக் கொண்டு "வாட்ஸ் ஆப்" குழு உருவாக்குதல்" என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மேலே பத்தி மூன்று மற்றும் நான்கில் உள்ள வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, இத்தகவல் பரிமாற்றக் குழுவினை 2023-2024 ஆம் ஆண்டு முதல் வட்டார அளவில் அமைத்து செயல்படுத்திடலாம் என அரசு கருதி, அவ்வாறே ஆணையிடுகிறது.

5. மேலும், வட்டார அளவிலான "வாட்ஸ் ஆப்" குழுக்கள் பற்றிய விபரங்களையும், விவசாயிகளுக்கு தகவல்கள் சென்று சேர்வது குறித்தும் மாதாந்திர அறிக்கையினை அரசுக்கு அனுப்புமாறு வேளாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை-5
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர், சர்க்கரைத்துறை, சென்னை-35
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-32.
தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), சென்னை -35.

செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை,
சென்னை-32.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3.
இயக்குநர், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறை,
கோயம்புத்தூர்-13.

நகல்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச்செயலகம்,
சென்னை-9.
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சரின் சிறப்பு
நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை- உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை-9.
உதிரி/இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

09/05/2023

பிரிவு அலுவலர்

9/5/23